காலாண்டுச் செய்திமடல்

அக்டோபர் 2007 மலர் 3 இதழ் 3


# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.



## நெல் வயல்களில் பாரம்பரிய முறையில் எலிக் கட்டுப்பாடு

தமிழ்நாட்டிலுள்ள சீர்காழிப் பகுதியில் வசிக்கும் இயற்கைவழி வேளாண் விவசாயிகள், தங்களுடைய வயல்களில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் எலிகளின் எண்ணிக்கையினால் பல்வேறு விதமான பிரச்சினைகளைச் சந்திக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைக் கட்டுப்படுத்துவதற்காக, சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்கத்தினர் பாரம்பரிய முறையைப் பின்பற்றி பாம்பு மற்றும் எலிகளைக் கட்டுப்படுத்துவதில் திறமை வாய்ந்த இருளர் இனத்தவரின் உதவியை நாடினார்கள். இதைத் தொடர்ந்து, சென்னை, குரோம்பேட்டையிலுள்ள இருளர் பாம்பு பிடிப்போர் தொழில் கூட்டுறவு சங்கத்தின் கீழ் பணிபுரியும் இருளர் இனத்தவர் அகணியிலுள்ள இயற்கைவழி வேளாண் வயல்களுக்கு வரவழைக்கப்பட்டனர். இவர்கள் சுமார் 15 ஏக்கர் வயல்களை ஆய்வு செய்து எலி வளைகளைக் கண்டுப்பிடித்தனர். பின்பு, வளைகளில் புகைமூட்டம் போட்டு, வெளியே வரும் எலிகளைப் பிடித்தனர். இந்த எலி வேட்டையில் சுமார் ஆறு பேர் ஈடுப்பட்டனர். மொத்தம் 233 எலிகள் பிடிக்கப்பட்டன. விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டத்தின் தொடர்ச்சியாக, இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் செயல்முறை விவசாயிகள் அனைவராலும் பெரிதும் வரவேற்கப்பட்டது. மேலும், வயல்களில் எலிகளின் எண்ணிக்கை கட்டுப்படுத்த முடியாத அளவிற்குச் செல்லும்போதெல்லாம் இந்தக் கட்டுப்பாட்டு முறையைச் செயல்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.



*சீர்காழியிலுள்ள அகணி கிராமத்தில், எலி வேட்டையில் ஈடுப்பட்டுள்ள இருளர் இனத்தவர்*

## இயற்கை விவசாயச் சான்றிதழ் பெறும் வழிமுறைகள் - ஒரு நாள் பயிற்சி

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் "இயற்கை விவசாயச் சான்றிதழ் பெறும் வழிமுறைகள்" என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி முகாம்களை நடத்த திட்டமிட்டுள்ளது. இயற்கை விவசாயச் சான்றிதழ் பெறுவதற்குப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைப் பற்றி விளக்குவதே இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். இந்தப் பயிற்சியில் இயற்கை விவசாயச் சான்றிதழ் எதற்கு? சான்றிதழ் பெறுவதன் முக்கியத்துவம், சான்று பெறும் வழிமுறைகள், பண்ணை பராமரிப்பு, பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் போன்றவை பற்றி பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் முடிவில் இயற்கை விவசாயச் சான்று பெற்ற பண்ணையைச் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்யப்படும். இந்தப் பயிற்சியானது ஒவ்வொரு மாதமும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் நடைபெறும். பயிற்சி தமிழில் அளிக்கப்படும். ஒரு பயிற்சிக்கு 25 நபர்களுக்கு அனுமதி உண்டு.

**பயிற்சிக் கட்டணம் :**

ரூ. 750/- (மதிய உணவு, பயிற்சி பற்றிய குறுந்தகடு உட்பட)

**பயிற்சி நடைபெறும் நாட்கள் :**

அக்டோபர்-27, நவம்பர்-24, டிசம்பர்-22, ஜனவரி-12

**பயிற்சி நடைபெறும் இடம் :**

CIKS இயற்கை விவசாயப் பண்ணை,
வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் அருகில், செங்கல்பட்டு

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

திட்ட ஒருங்கிணைப்பாளர்,
இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்,
503/3, சாந்தி நகர், வேதநாராயணபுரம், வேண்பாக்கம்,
ஒழலூர் சாலை, செங்கல்பட்டு - 603 111
தொலைபேசி : 044-27430625 / 27431971, செல் : 99427 96306,
மின்னஞ்சல் : ciksfo@gmail.com
இணையதளம் : www.ciks.org

பயிற்சிக்கான கட்டணத்தை Centre for Indian Knowledge Systems, payable at Chennai என்ற பெயருக்கு டிடி. எடுத்து மேற்கண்ட எங்கள் முகவரிக்கு அனுப்பவும்.



# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

**விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கை வேளாண்மைத் திட்டம் - II**

இந்தத் திட்டத்தை ஃபோர்ட் நிறுவனத்தின் உதவியுடன் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்காக, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலிருந்து சுமார் 497.44 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பருவத்தில், சுமார் 315.26 ஏக்கர் நிலத்தில் இயற்கைவழி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்திலும் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. வந்தவாசி இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் சங்கம் சென்ற மாதம் பதிவு செய்யப்பட்டது. சுக்கன்கொல்லையில் கட்டப்பட்டுவந்த உயிர்உரம் தயாரிப்பகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துவிட்டன. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தர்மபுரியிலுள்ள ட்ரைபல் ஹெல்த் இனிஷியேட்டிவ் (Tribal Health Initiative), கன்னியாகுமரியிலுள்ள நார்டெப் (NARDEP) மற்றும் திருநெல் வேலியில் உள்ள காஸ்ட் (CAST) நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மைத் தொடர்பான பயிற்சிகள் முறையே ஜூலை 18 - 23, ஜூலை 23 - 26 மற்றும் ஜூலை 27 - 30ஆம் தேதிகளில் நடத்தப்பட்டன. ஆகஸ்டு 10 மற்றும் 11ஆம் தேதிகளில், நாகப்பட்டினம் மாவட்டப் பயனீட்டாளர்கள் காந்திகிராமப் பல்கலைக் கழகத்திலுள்ள வேப்பம் பிண்ணாக்கு உற்பத்தி ஆலைக்கும், மூலிகைகளைப் பக்குவப்படுத்தும் ஆலைக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

**சுனாமியால் பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீரமைக்கும் திட்டம் - II**

இந்தத் திட்டத்தை, ''தி வெட்லேண்ட்ஸ் இன்டர்நேஷனல் சவுத் ஏஷியா'' என்ற நிறுவனத்தின் உதவியுடன் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் ஜூலை 2007 முதல் சீர்காழியில் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், உதயநிலா இயற்கை விவசாயிகள் சங்க உறுப்பினர்களுக்கு, திட்டத்தைப் பற்றிய அறிமுகக் கூட்டம் ஆகஸ்டு 1ஆம் தேதியன்று, சித்திவிநாயகபுரம் கிராமத்தில் நடத்தப்பட்டது. செப்டம்பர் 10ஆம் தேதியன்று, ''தாவரக் கரைசல்கள் தயாரிப்பதற்கான செயல் முறைகள்'' என்ற தலைப்பில் சித்திவிநாயகபுர தாவரக் கரைசல் தயாரிப்பகத்தின் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. செப்டம்பர் 12ஆம் தேதியன்று, சிசிடி நிறுவனம் வேளாண் கண்காட்சி ஒன்றை திருவெண்காட்டில் நடத்தியது. இந்த நிகழ்ச்சியில் சுபாஷிணி ஸ்ரீதர் அவர்கள் கலந்துகொண்டு, ''இயற்கைவழி மற்றும் ரசாயன முறை நெல் சாகுபடிக்கான செலவுகள் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு'' என்ற தலைப்பில் உரையாற்றினார். ''இயற்கைவழி நெல் சாகுபடி மற்றும் டிரம் விதைப்பானைப் பயன்படுத்தி விதைத்தல்'' என்ற தலைப்பில் உதய நிலா இயற்கை விவசாயிகள் சங்க உறுப்பினர்களுக்கு செப்டம்பர் 14ஆம் தேதியன்று பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி மையத்தை (TRRI) சேர்ந்த டாக்டர் ஆர். காமராஜ் அவர்கள் நடத்தினார்.

**உணவுக்கு உத்திரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மைத் திட்டம்**

புதுதில்லியிலுள்ள கபார்ட் (CAPART) நிறுவனத்தின் உதவியுடன் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பத்து கிராமங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து கிராமங்களிலும் சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 18 பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாக்கும் பணியில் மூன்று விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சித்தாலமங்கலம், திருவானைக்கோயில் மற்றும் சேந்தன்குளம் கிராம விவசாயிகளுக்கு முறையே ஜூலை 7, 18 மற்றும் 25ஆம் தேதிகளில், மூன்று பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில், நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள், இயற்கைவழி பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மற்றும் அகக் கட்டுப்பாட்டு முறைமை குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டன. ஜூலை 24ஆம் தேதியன்று, திருவானைக்கோயில் கிராமப் பயனீட்டாளர்கள், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள வெளுக்கம்பட்டு மற்றும் கடம்பை கிராமங்களிலுள்ள இயற்கை வேளாண் வயல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

**நெற்பயிர் சாகுபடி-விதை முதல் சந்தை வரை**

பெங்களூரிலுள்ள ஹீவாஸ் (HIVOS) நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சித்திரவாடி, கலியப்பேட்டை மற்றும் கொளத்தாஞ்சேரி கிராமங்களில் மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சென்ற பட்டத்தில் வழங்கப்பட்ட நெல் விதைகள் விவசாயிகளிடமிருந்து இருமடங்காகப் பெறப்பட்டன. செப்டம்பர் 11 மற்றும் 12ஆம் தேதிகளில், சித்திரவாடி, கொளத்தாஞ்சேரி, கலியப்பேட்டை மற்றும் ஈசூர் கிராமப் பயனீட்டாளர்கள் மைசூரிலுள்ள ஹாசன் மாவட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள், அகுடுகானகள்ளி மற்றும் அலனஹள்ளி கிராமங்களிலுள்ள இயற்கை வேளாண் வயல்களுக்குச் சென்று அங்கு பின்பற்றப்படும் பல்வேறு இயற்கைவழி வேளாண்மை நுட்பங்களையும், செலவற்ற வேளாண்மை நுட்பங்களையும் பார்வையிட்டனர். மேலும், கர்நாடகா இயற்கை விவசாயிகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு. சுவாமியானந்தன் அவர்களைச் சந்தித்து பல்வேறு இயற்கை வேளாண்மைச் செயல்முறைகள் குறித்து கலந்துரையாடினர்.

**காய்கறிகளில் விருட்சாயுர்வேதப் பரிசோதனை**

அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறையின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ''கத்தரியைத் தாக்கும் முக்கிய பூச்சிகளைத் தாவரக் கரைசல்களைப் பயன்படுத்தி கட்டுப்படுத்துதல்'' என்ற தலைப்பில் ஆய்வு ஒன்று அல்லிவிளாகம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அகணியிலுள்ள நிழல்வலைக் கூடத்தில், வெண்டையில் பஞ்சகவ்யத்தைப் பயன்படுத்து வதினால் மகசூலில் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கண்டறிவதற்கான ஆய்வு தொடங்கப்பட்டுள்ளது.

**தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டம்**

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறையின் உதவியுடன் தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டத்தை சீர்காழியில் செப்டம்பர் 2005 முதல் செயல்படுத்தி வருகிறது. அசுவுணிகளில், *ஆடாதோடை ஷாரம், எருக்கு ஷாரம்* மற்றும் வேப்ப எண்ணெய் சோப்புக் கரைசலைப் பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெல்லில் காணப்படும் இலைச்சுருட்டுப் புழுக்களின் தாக்குதலை பூண்டு *அர்க்கம்* மற்றும் பூண்டு கரைசலைப் பயன்படுத்தி கட்டுப்படுத்துவதற்கான ஆய்வுகள் முடிக்கப்பட்டு விட்டன.

**காம்பாஸ் திட்டம் - II**

இந்தத் திட்டம் காம்பாஸ் நிறுவனத்தின் உதவியுடன், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மே 2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் நெற்பயிரில் நொதித்த கோமியத்தினால் மகசூலில் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கண்டறிவதற்கான ஆய்வு அகணியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் நோயியல் துறையில், தக்காளியில் *வசம்பு* பொடி மற்றும் பசும்பாலைப் பயன்படுத்தி விதை நேர்த்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காரைக்காலில் உள்ள பண்டிதர் ஜவஹர்லால் நேரு வேளாண்மை அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஆர். லதா மற்றும் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் பயிர் இனப்பெருக்கவியல் மற்றும் மரபியல் துறையின் பேராசிரியர் டாக்டர் ஆனந்தன் ஆகியோரின் உதவியுடன்பாரம்பரிய நெல் ரகங்களைப் பற்றிய விவரங்களைப் பதிவு செய்வதற்கான விளக்க

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஜூன் 22ஆம் தேதியன்று நடைபெற்ற விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டத்தின் தொடர்ச்சியாக, திட்டத்திலுள்ள சுமார் 17 விவசாயிகள் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள செக்கையநாயக்கனூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 16 பாரம்பரிய நெல் ரகங்களின் பண்புகளைப் பதிவு செய்யும் பணி அண்ணாமலை பல்கலைக் கழகத்தின், பயிர் இனப்பெருக்கவியல் துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### தொழிற்நுட்ப ஆதார மையத்தின் செயல்பாடுகள்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் தொழிற்நுட்ப ஆதார மையம் (Technology Research Centre) அக்டோபர் 2005 முதல் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள சுமார் 22 தொண்டு நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கு ஜூலை 9 - 13ஆம் தேதிகளில், பயிற்சியாளர் பயிலரங்கு (Trainer's Training Programme) ஒன்று நடத்தப்பட்டது. இதில், இயற்கைவழி வேளாண்மை, விதைப் பாதுகாப்பு, மண்வள மேம்பாடு, இயற்கைவழி நெல் சாகுபடி, நெல் மற்றும் காய்கறிகளைத் தாக்கக்கூடிய பூச்சிகள் மற்றும் நோய்கள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. அக்டோபர் 27ஆம் தேதியன்று, "இயற்கைவழி வேளாண்மைச் சான்று பெறுதல்" என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி முகாம், நமது சுக்கன்கொல்லை பண்ணையில் நடைபெற உள்ளது.

### இணையத்தளம் மற்றும் கணினி தொழிற் நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், சென்னை யிலுள்ள ரூரல் டெக்னாலஜி பிசினஸ் இங்குபேட்டர் (Rural Technology Business Incubator) நிறுவனத்துடன் இணைந்து மேற்கண்ட ஆய்வுத் திட்டத்தை மயிலாடுதுறையில் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்காக, சீர்காழி, கொள்ளிடம், மயிலாடுதுறை மற்றும் தரங்கம்பாடி பகுதிகளிலிருந்து சுமார் 10 இணையகங்கள் (kiosks) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ், சுமார் 160 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, எட்டு இணையகங்களின் கீழ் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இளையான்குடி, கொண்டல் மற்றும் அல்லிவிளாகம் கிராமப் பயனீட்டாளர்களுக்குத் திட்டத்தைப் பற்றிய அறிமுகக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

### சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்

சுக்கன்கொல்லையிலுள்ள ஆய்வுப் பண்ணையில், 50 விதமான பாரம்பரிய நெல் ரகங்களும், 18 காய்கறி ரகங்களும் விதைக்கப்பட்டுள்ளன. ஒற்றை நாற்று முறை சாகுபடிக்காக தூயமல்லி நெல் ரகத்தைப் பயன்படுத்தி டாபோக் (Dapog) நாற்றாங்கால் அமைக்கப்பட்டுள்ளது. தக்காளியில் ஏற்படும் காய்த்துளைப்பான் தாக்குதலைப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தாமல் (NPM Technique) கட்டுப்படுத்துவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சீர்காழி பயணம்

ஜூலை 6 மற்றும் 7ஆம் தேதிகளில், ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களும், கே. விஜயலட்சுமி அவர்களும் இரண்டு நாள் பயணமாக சீர்காழி சென்றிருந்தனர். ஜூலை 6ஆம் தேதியன்று, அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் பூச்சியியல் துறை பேராசிரியர் எஸ். அறிவுடைநம்பி அவர்களையும், நோயியல் துறை பேராசிரியர் குருசேவ் அவர்களையும், துறை தலைவர் டாக்டர் குப்புசாமி அவர்களையும், வேளாண் தாவரவியல் துறை பேராசிரியர் டாக்டர் பிரகாஷ் அவர்களையும், தோட்டக்கலையியல் துறை பேராசிரியர் டாக்டர் மணிவண்ணன் அவர்களையும் சந்தித்து, இந்தத் துறைகளுடன் இணைந்து ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ளுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி கலந்துரையாடினர். ஜூலை 7ஆம் தேதியன்று, சித்திவிநாயகப்புரத்திலுள்ள தாவரக் கரைசல் தயாரிப்பகத்திற்கும், அகணியிலுள்ள ஆய்வுப் பண்ணைக்கும் சென்றிருந்தனர். இதை தொடர்ந்து, சீர்காழி அலுவலகப் பணியாளர்களையும், சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்கப் பொறுப்பாளர்களையும் சந்தித்து கலந்துரையாடினர்.

### இலங்கை குழுவினரின் வருகை

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேளாண்மைத் தொடர்பான நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வரும் இத்தாலிய நிதி நிறுவனமான ஐசிஇஜ (ICEI) கேட்டுக் கொண்டதன் பேரில், நான்கு பேர் அடங்கிய இலங்கை குழுவிற்குப் பயிற்சிகள் மற்றும் சுற்றுப் பயணங்களை நமது மையம் ஏற்பாடு செய்தது. இந்தக் குழுவில், திரு. ஜிசேப்பி புசாலக்கி, ஐசிஇஜ, இத்தாலி, திரு. ஐ.எம். நஜிம், ஐசிஇஜ, இலங்கை, திரு. அரிஸ்சந்திர சில்வா, காமி சேவா சேவனா, இலங்கை மற்றும் திரு. நிர்மல் தயாரத்னே, வேளாண் துறை, அம்பாரா மாவட்டம், இலங்கை ஆகியோர் அடங்குவர். இவர்களுக்கு ஜூலை 17ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை, பல்வேறு பயிற்சிகள் மற்றும் சுற்றுப் பயணங்கள் சென்னை, செங்கல்பட்டு மற்றும் சீர்காழிப் பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டன.

### வேளாண் பல்கலைக் கழகத்திற்குப் பயணம்

அண்ணாமலை பல்கலைக் கழக வேளாண் ஆராய்ச்சி சங்கம் ஜூலை 26ஆம் தேதியன்று, கூட்டம் ஒன்றை நடத்தியது. நமது மையத்தின் சார்பாக சுபாஷிணி ஸ்ரீதர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு "சுனாமி நிவாரணப் பணிகளில் சிஐகேஎஸ்-ன் அனுபவம் - ஆய்வும், மதிப்பீடும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்தக் கூட்டத்தில் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 150 ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### சுயஉதவி குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி

ஆகஸ்டு 18ஆம் தேதியன்று, அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் வேளாண் அறிவியல் துறை, சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி முகாம் ஒன்றை தாண்டவன்குளம் கிராமத்தில் நடத்தியது. இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்திலிருந்து பி. கிருத்திகா மற்றும் எஸ். அசோக்குமார் ஆகியோர் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு, முறையே, மண்புழு உரத் தயாரிப்பு, மண்புழு தயாரிப்பகம் அமைப்பதற்கு ஆகும் செலவுகள் மற்றும் வியாபார உத்திகள் பற்றியும், தாவரக் கரைசல் தயாரிக்கும் முறைகள் பற்றியும் பயிற்சி அளித்தனர்.

### ஆந்திரா பயணம்

ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள், ஆந்திர பிரதேசத்தின் அனந்தபூர் மாவட்டத்திலுள்ள "திம்பக்து கலெக்டிவ்" நிறுவனத்திற்கு ஆகஸ்டு 31 - செப்டம்பர் 3ஆம் தேதிகளில் சென்றிருந்தார். மேலும், அங்கு செயல்படுத்தப்பட்டு வரும் இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்தின் பணிகளைப் பற்றி அறிந்து கொண்டார்.

### மும்பை பயணம்

செப்டம்பர் 7ஆம் தேதியன்று, ஆ.வே. பாலசுப்பிர மணியன் அவர்கள் மும்பை சென்றிருந்தார். அங்கு அவர், டாடா சமூக அறிவியல் கல்வி நிறுவனத்தின் வேலை வாய்ப்பு அலுவலர் டாக்டர் ஸ்வப்பன் கரேய்ன் அவர்களைச் சந்தித்தார். மேலும், சமூக சேவையில் முதுகலைப் பட்டம் பெற்ற மாணவர்கள் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தில் பணிபுரிவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி கலந்துரையாடினார். இதை தொடர்ந்து, அறிவியல் கல்விக்கான ஹோமி பாபா மையத்திற்குச் சென்று டாக்டர் ரவி சுப்பிரமணியன் அவர்களைச் சந்தித்தார்.

### தன்னார்வ தொண்டு நிறுவனங்களைப் பற்றிய கூட்டம்

தி இன்ஸ்டிடியூட் ஆப் சார்டட் அக்கௌன்டன்ஸ் ஆப் இந்தியா (The Institute of Chartered Accountants of India) தன்னார்வ தொண்டு நிறுவனங்களைப் பற்றிய கூட்டம் ஒன்றை நடத்தியது. இந்தக் கூட்டத்தில், ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு "சிறு மற்றும் நடுத்தரத் தொண்டு நிறுவனங்களை மேலாண்மை செய்தல்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

### இயற்கைவழி வேளாண்மைப் பயிற்சி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் துறை கள விரிவாக்க அலுவலர்களுக்கு "இயற்கைவழி வேளாண்மை" என்ற தலைப்பில் ஐந்து நாள் பயிற்சி முகாம் ஒன்றை செப்டம்பர் 24ஆம் தேதி முதல் 28ஆம் தேதி வரை நடத்தியது. நமது மையத்தின் சார்பாக சுபாஷிணி ஸ்ரீதர் அவர்கள் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு "இயற்கைவழி வேளாண்மைச் சான்றிதழ் பெறும் முறைகள், பதிவேடுகளைப் பராமரித்தல், இயற்கைவழி விளைபொருட்களைத் தரம் பிரித்தல், பைகளில் அடைத்தல், கையாளுதல் மற்றும் சேமித்தல்" குறித்து உரையாற்றினார்.

# இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள்

## விற்பனைக்குத் தயாராக உள்ள இயற்கை உணவுப்பொருட்களின் விலைப் பட்டியல்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரிய அரிசி ரகங்கள் மற்றும் இதர உணவுப்பொருட்களின் விற்பனையில் ஈடுப்பட்டுள்ளது. எங்களிடம் தற்போது விற்பனைக்குத் தயாராக உள்ள உணவுப் பொருட்களின் விலைப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | இயற்கை உணவுப்பொருள் | சில்லறை விலை (ரூ./கிலோ) | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | பச்சரிசி | புழுங்கல் அரிசி | |
| 1. | வெள்ளை பொன்னி | 26 | 24 | சாப்பாட்டிற்கு ஏற்றது. |
| 2. | ADT-43 அரிசி | - | 20 | சாப்பாட்டிற்கு ஏற்றது. |
| 3. | ADT-37 அரிசி | - | 19 | இட்லி மற்றும் தோசைக்கு ஏற்றது. |
| 4. | காடைக் கழுத்தான் (பாரம்பரிய ரகம்) | - | 20 | இட்லி மற்றும் தோசைக்கு ஏற்றது. |
| 5. | வெள்ளை பொன்னி - குருணை | 10 | 8 | இட்லி மற்றும் தோசைக்கு ஏற்றது. |
| | இயற்கை உணவுப் பொருள் | சில்லறை விலை (ரூ./கிலோ) | | |
| 6. | வெல்லம் | 30 | | - |
| 7. | உளுந்து | 65 | | - |
| 8. | அவல் (சிவப்பு) | 32 | | - |

மேற்கண்ட உணவுப் பொருட்களை வாங்க விரும்பினால், எங்கள் மையத்தின் விற்பனை மேலாளர் எம். சுரேஷ் (99427 96313) அல்லது விற்பனை பிரதிநிதி டி. கண்ணன் (99427 96314) அவர்களைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது suresh@ciks.org என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

# வருகையாளர் பதிவேடு

- *ஜூலை 2ஆம் தேதியன்று, பெங்களூரிலுள்ள ஹெரிடேஜ் (Heritage) நிறுவனத்தின் இயக்குனர் மற்றும் செயலாளர் திருமதி. விஜயலட்சுமி விஜயகுமார் அவர்களும், திருமதி. உஷா மற்றும் திருமதி. சித்ரா அவர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.*
- *ஜூலை 13ஆம் தேதியன்று, காரைக்காலிலுள்ள பண்டிதர் ஜவஹர்லால் நேரு வேளாண் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் நமது மையத்தின் சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தனர்.*
- *ஜூலை 21ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள ரூரல் டெக்னாலஜி பிஸினஸ் இன்குபேட்டர் (Rural Technology Business Incubator) அமைப்பைச் சேர்ந்த செல்வி ஹரிணி அவர்களும் திரு. ஆஞ்சநேயா அவர்களும் நமது மையத்தின் சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தனர்.*
- *ஜூலை 26ஆம் தேதியன்று, கனடாவிலுள்ள சர்வதேச வளர்ச்சி ஆராய்ச்சி மையத்தின் (International Development Research Centre) மலேசியாவிலுள்ள ஆசிய அலுவலகத்திலிருந்து திரு. ஸ்ரீதர் சேதுரத்னம் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *ஆகஸ்டு 6ஆம் தேதியன்று, கலவையிலுள்ள வேளாண் கல்லூரியைச் சேர்ந்த ஆறு மாணவர்கள், இயற்கை வேளாண்மைத் தொழிற்நுட்பங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *ஆகஸ்டு 10ஆம் தேதியன்று, தர்மபுரி மாவட்டத்திலுள்ள டிரைபல் ஹெல்த் இனிஷியேட்டிவ் (Tribal Health Initative) நிறுவனத்திலிருந்து டாக்டர் லலிதா அவர்களும் டாக்டர் ரெஜி அவர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.*
- *ஆகஸ்டு 13ஆம் தேதியன்று, இலங்கையைச் சேர்ந்த இயற்கை விவசாயி திரு. ஜோமோ உடுமன் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *செப்டம்பர் 11ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள கிரீன் கோஸ்ட் திட்ட (Green Coast Project) அலுவலகத்திலிருந்து திட்ட அலுவலர் திரு. அருள்ராஜ் அவர்கள் நமது மையத்தின் சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தார்.*
- *செப்டம்பர் 13ஆம் தேதியன்று, ஆந்திர பிரதேசத்தின் அனந்தபூர் மாவட்டத்திலுள்ள திம்பக்து கலக்டிவ் (Timbaktu Collective) நிறுவனத்திலிருந்து, திரு. ஆஸிஷ் பாண்டா அவர்களும், திரு. அஸ்வின் ஜோசப் அவர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.*
- *செப்டம்பர் 20ஆம் தேதியன்று, திருச்சிக்கு அருகிலுள்ள பயிர் ஆசிரமத்திலிருந்து திரு. செந்தில் கோபால கிருஷ்ணன் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *செப்டம்பர் 25ஆம் தேதியன்று, விசாகப்பட்டினத்திலுள்ள ஐடியா (IDEA) நிறுவனத்தின் தலைமை அலுவலர் திரு. கவுதம் சங்கர் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி, து. து. நிர்மலா தேவி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862 தொலைநகல் : 91-044-24471114

மின்னஞ்சல் : info@ciks.org இணையத்தளம் : www.ciks.org